செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-70 அக்டோபர், 2026

UFBU போராட்டம் முடிந்துவிடவில்லை - ஒன்றுபட்ட போராட்டம் வெல்லும்வரை தொடரும்

வாரம் ஐந்து நாள் வங்கிப் பணியை விரைவில் செயல்படுத்துவதற்கான UFBU - IBA நிர்வாகிகள் கொண்ட உயர்மட்டக் குழு அமைப்பு

 # ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட வாரம் ஐந்து நாள் வங்கிப் பணியை அமல்படுத்துதல்

 # தன்னிச்சையான PLI திட்டம் செயல்படுத்துவதை நிறுத்தி வைத்தல்

 # இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் PLI திட்டத்தினை திருத்துதல்

 # நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு காணுதல்

ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு (UFBU) செப்டம்பர் 28, 29 & 30, 2026 ஆகிய தேதிகளில் மூன்று நாள் வேலைநிறுத்தம் மற்றும் அக்டோபர் 26, 2026 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.



கடந்த 11-09-2026 அன்றைய நாடு தழுவிய வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் வெற்றிகரமான வேலை நிறுத்தம் மற்றும் அதனைத் தொடர்ந்த போராட்ட நடவடிக்கைகள் தீவிரமடைந்த நிலையில் IBA-வின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கும் UFBU சங்கங்களுக்கும் இடையே 27-09-2026 அன்று எட்டப்பட்ட புரிந்துணர்வு, ஐந்து நாள் வங்கிப் பணி, செயல்திறன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை(PLI) மற்றும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்த நமது தொடர்ச்சியான போராட்டத்தில் ஒரு முக்கியமான வெற்றியாக அமைந்தது.

நாடு முழுவதும் நடைபெற்ற வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் போராட்டம் நமது கோரிக்கைகள் நிறைவேறும் வகையில் முக்கியமான முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துள்ள சூழலில்,**27-09-2026** அன்றைய தினம் நள்ளிரவு வரை நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினை அடுத்து **UFBU** அறிவித்திருந்த வேலை நிறுத்தப் போராட்ட நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

UFBU வின் இம்முடிவு, போராட்டங்களை கைவிடுதல் என்பதல்ல - மாறாக தற்போதைக்கு ஒத்திவைத்து ஆக்கபூர்வமான தீர்வுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்படுவதற்கான முயற்சியே ஆகும்.

வாரம் ஐந்து நாள் வங்கிப் பணியை அமல்படுத்துதல் குறித்த உடன்படிக்கை:

IBA மற்றும் **UFBU** சங்கங்களுடன், **2024**, மார்ச் **8** அன்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் முடிவில் அனைத்து சனிக்கிழமைகளையும் வங்கி விடுமுறையாக அறிவிக்க ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்க ஒப்புக்கொள்ளப்பட்டு, இத்திட்டம் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்குப் பிறகு நடைமுறைக்கு வரும் என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது.



ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இதற்கு ஒப்புதல் அளித்து நடைமுறைப்படுத்தாமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருகின்றது.

27-09-2026 அன்றைய தினம் எட்டப்பட்ட புரிந்துணர்வின்படி அனைத்து சனிக்கிழமைகளையும் வங்கி விடுமுறையாக அறிவிக்க வழிவகை செய்யும் நோக்கில், **IBA** மற்றும் **UFBU**-வின் கீழ்க்கண்ட பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழு (**HIGH LEVEL COMMITTEE**) அமைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை மூலம், ஐந்து நாள் வங்கிப் பணி செயல்முறை அடுத்த கட்டத்திற்கு நகர்ந்துள்ளது.

	NAME/DESIGNATION AND BANK - REPRESENTING IBA	NOMINATED AS
1	MR RAJNEESH KARNATAK, MD & CEO, BANK OF INDIA	CHAIRMAN
2	MR ASHOK CHANDRA, MD & CEO, PUNJAB NATIONAL BANK	ALTERNATE CHAIRMAN
3	MR BINOD KUMAR, MD & CEO, INDIAN BANK	MEMBER
4	MR RAKESH SHARMA, MD & CEO, IDBI BANK LTD	MEMBER
5	MR G S RANA, DMD (HR &CDO), STATE BANK OF INDIA	MEMBER

	NAME - REPRESENTING UFBU	NAME OF UNION/ASSOCIATION & POST HELD
1	COM C H VENKATACHALAM	AIBEA, GENERAL SECRETARY
2	COM RUPAM ROY	AIBOC, GENERAL SECRETARY
3	COM L CHANDRASEKHAR	NCBE, GENERAL SECRETARY
4	COM SANJAY KHAN	AIBOA, GENERAL SECRETARY
5	COM DEBASISH B CHOUDHARY	BEFI, GENERAL SECRETARY
6	COM PREM MAKKAR	INBOC, GENERAL SECRETARY
7	COM O P SHARMA	INBEF, GENERAL SECRETARY

இது நமது போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்லப்படும் வழிமுறையாக அமைந்துள்ளது. **UFBU** அமைப்பிற்கு, நம் சங்கங்களின் விவாதங்களை வலுவுடன் எடுத்துரைக்கவும், நியாயமான கால அவகாசத்தில் உறுதியான முடிவை இப்பிரச்சினையில் உருவாக்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

இந்த உயர்மட்டக் குழு, நம் கோரிக்கையினை விரைவாக அமலாக்குவது தொடர்பான அனைத்து வழி வகைகளையும் ஆய்வு செய்து விரைவில் தீர்வு காண முயற்சிகளை மேற்கொள்ளும். இக்குழுவின் முதல் கூட்டம் **30-09-2026** அன்று காணொளி வாயிலாக நடைபெற்றது. இந்நடவடிக்கை மூலம் இதுகாறும் ஒன்றிய அரசினால் கூறப்பட்ட வெறும் "பரிசீலனை" என்ற உறுதிமொழிக்கு மாறாக வாரம் ஐந்து நாள் வங்கிப் பணியை அமல்படுத்துதல் குறித்த பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் வரையறுக்கப்பட்ட வழிமுறை ஏற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வங்கிகளின் தன்னிச்சையான **PLI** திட்டம் அமல்படுத்தும் பிரச்சினை குறித்து:

நமது ஒன்றிணைந்த போராட்டத்தினை அடுத்து, ஒன்றிய அரசாங்கமே பிரச்சினைக்குரிய **PLI** திட்டத்தை நிறுத்தி வைப்பதாக பகிரங்கமாக ஒப்புக்கொண்டது. இது **UFBU**-வின் ஒன்றுபட்ட எதிர்ப்பின் விளைவு ஆகும். ஊழியர்களின் செயல்திறனுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை(**PLI**) திட்டத்தினை தன்னிச்சையாக அமல்படுத்துவதைத் தடுத்து, இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு நம் போராட்டம் இட்டுச் சென்றுள்ளது.

மேலும், **SCALE- IV** மற்றும் அதற்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கான **PLI** குறித்து இருதரப்பு பேச்சுவார்த்தை மூலமாக தகுந்த திருத்தங்களை அரசுக்கு முன்மொழியலாம் என்று **IBA** தற்போது முறையாக ஒப்புக்கொண்டுள்ளது. வங்கியின் செயல்திறன் என்பது அனைத்து ஊழியர்களின் கூட்டு பங்களிப்பு ஆகும். எனவே **2024-25** ஆண்டிற்கு, **SCALE- IV** அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட **PLI** தொகையினை அடிப்படையாகக் கொண்டு, **SCALE-III** வரை உள்ள ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பொருத்தமான ஒப்பீட்டு விகிதம் இருக்க வேண்டும் என்று **UFBU** வலியுறுத்தி உள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக **IBA** மற்றும் **UFBU** இடையே உடனடியாக தொடங்கும் பேச்சுவார்த்தை மூலமாக ஒவ்வொரு நிலையிலும் உள்ள ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் கூட்டுப் பங்களிப்பை அங்கீகரித்து, செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, சமமான **PLI** திட்டத்தினை அமலாக்க வழிகோலுவதே நமது நோக்கமாகும். நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் ஏற்கனவே ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட ஆதாயங்களை அனைவருக்கும் சமமான மற்றும் உள்ளடக்கிய ஒப்பந்தமாக மாற்ற **UFBU** பாடுபடும்.



தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு காணுதல்:

2024, மார்ச் **8** ஒப்பந்தத்தின் நிலுவையிலுள்ள பிரச்சினைகளான **PLI** திட்டத்தில் முன்னேற்றம், **NPS**-லிருந்து **OPS**-க்கு மாறுதல், ஓய்வூதிய மேம்பாடு, பணிக்கொடை வரம்பு, மருத்துவ காப்பீடு, தேவையான ஊழியர் நியமனம் , சிறப்பு படியை (**SPECIAL ALLOWANCE**) ஓய்வூதியத்திற்கு கணக்கிடுதல், வடகிழக்கு மாநிலத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை, கருணை அடிப்படையிலான பணி நியமனம், சீரான வணிக நேரம், **LTC/LFC** பணமாக்குதல், அதிகாரிகளுக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட வேலை நேரம் ஆகிய கோரிக்கைகள் மீது விரைவான தீர்வு ஏற்பட பேச்சுவார்த்தைகள் உடனடியாகத் துவக்கப்படும் என்று **27-09-2026** அன்றைய தினம் எட்டப்பட்ட புரிந்துணர்வில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தொடர் மூன்று நாட்கள் வேலை நிறுத்த அறைகூவல் காரணமாக வாடிக்கையாளர் சேவை பாதிப்பினை ஓரளவு மேம்படுத்தும் நோக்கத்தில் இந்திய ரிசர்வ் வங்கி **27-09-2026** ஞாயிறு அன்று வங்கிகளை திறக்க அனுமதித்ததால், அன்றைய விடுமுறை நாளில் வங்கிக் கிளைகளுக்கு வந்து நமது ஊழியர்களும் அதிகாரிகளும் பணி செய்ததற்கான இழப்பீடு குறித்து **27-09-2026** அன்று **IBA** உடனான பேச்சுவார்த்தையில் சிறப்பு ஊதியம் வழங்குவது குறித்த கோரிக்கை **UFBU** அமைப்பினால் வலியுறுத்தப்பட்டது.

.

பேச்சுவார்த்தையின் முடிவில், **27-09-2026** ஞாயிறு அன்று கிளைகளில் பணி புரிந்த எழுத்தர் மற்றும் துணைநிலை ஊழியர்களுக்கு இருதரப்பு ஒப்பந்தப்படி இரட்டிப்பு மிகை நேர ஊதியம் (**200** சதவீத **OT**) மற்றும் அதிகாரிகளுக்கு ஒரு நாள் ஊதியம் வழங்கப்படும் என்ற உறுதியினை **IBA** தெரிவித்தது.



UFBU அறிவித்த நமது போராட்ட நடவடிக்கைகளில் **UFBU** இணைப்பு சங்கங்களைச் சார்ந்த ஊழியர்களும் அதிகாரிகளும் மிகுந்த உறுதியுடனும் ஒற்றுமையுடனும் பங்கேற்றதனால் ஏற்பட்ட முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு இப்போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒற்றுமையே நமது மிகப்பெரிய பலம் ஆகும். தற்போது எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் இலட்சக்கணக்கான வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் நம்பிக்கை மற்றும் உறுதியுடன் ஒன்றிணைந்து போராடியதால் மட்டுமே சாத்தியமானது.

பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் **UFBU** அமைப்பின் அனைத்து சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் சொந்தமானது. சங்கத்தின் உறுப்பினர்கள் வதந்திகளைப் புறந்தள்ளி, **UFBU** மற்றும் அதன் அங்கமான சங்கங்களின் அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே பெற்று, அவற்றை செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதை **UFBU** அமைப்பு விழிப்புணர்வுடன் உன்னிப்பாக கண்காணித்து, தேவைப்படின், மேலும் போராட்ட நடவடிக்கைகளை முடிவு செய்து அறிவிக்கும். கோரிக்கைகளை வென்றெடுக்க ஒற்றுமையுடனும் - நம்பிக்கையுடனும் - உறுதியுடனும் இருப்போம். நமது ஒற்றுமையே – நமது பலம் என்பதை நாம் உணர்வோம்.

வங்கிப் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு 2026-27ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு புதுப்பித்தல்

பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கான குழு மருத்துவக் காப்பீடு (**GROUP MEDICAL INSURANCE**) அக்டோபர் **31, 2026** அன்று முடிவடைவதால் காப்பீட்டினை **2026-27**ஆம் ஆண்டுக்காக புதுப்பிக்கப்படுவது குறித்த ஆலோசனை **UFBU** மற்றும் **IBA**வுடன் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கடந்த **17.07.2026** அன்று தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட **MoU**-படி கூடுதல் காப்பீடு மற்றும் புதுப்பிக்கப்படும் காப்பீட்டுத் தொகை, காப்பீட்டில் சில நோய்கள்/ சிகிச்சைகளைச் சேர்த்தல், மேம்பாடுகளைச் செய்யவும், இப்பேச்சுவார்த்தையில் ஒப்புக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் இதற்கான காப்பீட்டு நிறுவனம் மற்றும் பிரீமியத் தொகைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது.



அதன்படி, **2026-27**ம் ஆண்டிலும் **NATIONAL INSURANCE CO. (NICL)** காப்பீட்டு நிறுவனம் கூடுதல் பலன்களை உள்ளடக்கிய காப்பீட்டிற்கான பிரீமியத்துடன் மேலும் ஒரு வருடம் நீட்டிக்க ஒப்புக்கொண்டது. அதனைத் தொடர்ந்து, பேச்சுவார்த்தைக் குழு கடந்த **2026**, ஆகஸ்ட் மாதம் கூடி பிரீமிய உயர்வு பற்றி விவாதித்து, திருத்தப்பட்ட **NICL**-ன் முன்மொழிவு **IBA** வினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றோருக்கான **1-11-2026** முதல் புதுப்பிக்கப்பட உள்ள ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு பாலிசிக்கான பிரீமியம் பின்வருமாறு:

	FOR IN SERVICE EMPLOYEES	FOR IN SERVICE OFFICERS	
	CLERKS / SUB STAFF	UPTO SCALE-V	SCALE-VI & ABOVE
POLICY AMOUNT	Rs 4 LACS	Rs 5.25 LACS	Rs 7 LACS
PREMIUM	Rs 36,200	Rs 46,467	Rs 68,454

TOP UP FOR EMPLOYEES				
POLICY AMOUNT	Rs 1 LAC	Rs 2 LACS	Rs 3 LACS	Rs 4 LACS
PREMIUM	Rs 7,701	Rs 12,101	Rs 14,301	Rs 17,011

	FOR RETIRED EMPLOYEES		FOR RETIRED OFFICERS		
	WITH SPOUSE		WITH SPOUSE		
POLICY	Rs 3 LACS	Rs 4 LACS	UPTO SCALE-V	SCALE-VI & ABOVE	
			Rs 5.25 LACS	Rs 5.25 LACS	Rs 7 LACS
PREMIUM	Rs 27,996	Rs 32,144	Rs 41,714	Rs 41,714	Rs 62,213
	WITHOUT SPOUSE		WITHOUT SPOUSE		
	Rs 3 LACS	Rs 4 LACS	UPTO SCALE-V	SCALE-VI & ABOVE	
			Rs 5.25 LACS	Rs 5.25 LACS	Rs 7 LACS
PREMIUM	Rs 25,197	Rs 30,329	Rs 38,552	Rs 38,552	Rs 49,770

TOP UP FOR RETIREES				
POLICY AMOUNT	**Rs 1 LAC**	**Rs 2 LACS**	**Rs 3 LACS**	**Rs 4 LACS**
RETIREE WITH SPOUSE	**Rs 13,126**	**Rs 21,001**	**Rs 30,801**	**Rs 41,001**
RETIREE-SINGLE PERSON	**Rs 11,152**	**Rs 17,851**	**Rs 26,176**	**Rs 32,801**

OPTIONAL - ADD ON FOR RETIREES			
FOR DEPENDANT PHYSICALLY OR MENTALLY CHALLENGED CHILDREN OF RETIREES		**ADD ON TOP UP POLICY**	
INSURANCE COVER	**PREMIUM**	**INSURANCE COVER**	**PREMIUM**
FOR Rs 3.00 LACS	**Rs 10,001**	**FOR Rs 1 LAC**	**Rs 5,001**
FOR Rs 4.00 LACS	**Rs 12,501**	**FOR Rs 2 LACS**	**Rs 10,001**
FOR Rs 5.25 LACS	**Rs 15,001**	**FOR Rs 3 LACS**	**Rs 20,001**
FOR Rs 7.00 LACS	**Rs 35,001**	**FOR Rs 4 LACS**	**Rs 30,001**

ஓய்வுபெற்ற எழுத்தர் மற்றும் துணை நிலை ஊழியர்கள் ரூ 3 இலட்சம் அல்லது ரூ 4 இலட்சத்திற்கான அடிப்படை மருத்துவக் காப்பீடும், ஓய்வுபெற்ற அதிகாரிகள் SCALE I to V - ரூ 5.25 இலட்சம், SCALE VI & ABOVE - ரூ 5.25 இலட்சம் அல்லது ரூ 7 இலட்சத்திற்கான அடிப்படை மருத்துவக் காப்பீடும் தேர்வு செய்யலாம்.

2026-27 புதுப்பிக்கப்படவுள்ள கூடுதல் காப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட முக்கிய பலன்கள்:

- **மருத்துவமனை அறை வாடகை: டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத் ஆகிய 6 மெட்ரோ நகரங்களில் ரூ 5,000லிருந்து ரூ 7,000ஆகவும், தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) அனுமதிக்கான கட்டணம் ரூ 7,500லிருந்து ரூ 9,500/- ஆக உயர்வு.**

- **பணியில் உள்ள ஊழியர்களுக்கு இயல்பான பிரசவத்திற்கு (NORMAL DELIVERY) ரூ 50,000லிருந்து ரூ 1,00,000/- ஆகவும், அறுவை சிகிச்சை பிரசவத்திற்கு (CAESAREAN SECTION) ரூ 75,000 லிருந்து ரூ 1,50,000/- ஆகவும் உயர்த்தப்படும். குழந்தை பராமரிப்பு மற்றும் தடுப்பூசி தொடர்பான செலவுகளும் (குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரை) இத்தொகையில் அடங்கும்.**
- **தீவிர நோய் பாதிப்பு (CRITICAL ILLNESS) ஏற்படும் பட்சத்தில் ஊழியருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை (EX-GRATIA) 1 இலட்சம் ரூபாயிலிருந்து ரூ 2,00,000/- ஆக உயர்த்தப்படும்.**
- **கண்புரை (CATARACT) சிகிச்சைக்கான வரம்பு ஒரு கண்ணுக்கு 40,000 ரூபாயிலிருந்து ரூ 50,000/- ஆக உயர்த்தப்படுகிறது.**
- **மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சார்ந்திருப்பவர்களுக்கான (DEPENDENT ELIGIBILITY) வருமான வரம்பு மாதம் 18,000 ரூபாயிலிருந்து ரூ 24,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**

- தகுதியுள்ள ஊழியர்களுக்கு **INFERTILITY** சிகிச்சைக்கான **(IVF)** தனி வரம்பாக ரூ **2** லட்சம் நிர்ணயிக்கப்படும்.
- வீட்டுப் பராமரிப்பின் **(DAY CARE)** கீழ் பின்வருவன சேர்க்கப்படும்: **(I) ALBUMIN INFUSION (II) PERITONEAL DIALYSIS (III) ORAL CHEMOTHERAPY** (இச்சிகிச்சைக்கான செலவுகளில், மருந்துகளின் விலை, மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் மற்றும் அனைத்து மருத்துவப் பரிசோதனைகளின் கட்டணங்களும் அடங்கும்).
- **DOMICILIARY TREATMENT** சிகிச்சையில் பின்வருவனவற்றைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டது:
  - **(I)** டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற பூச்சிகளால் பரவும் நோய்கள்
  - **(II)** **(II)** சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் குரூப் **B** மற்றும் குரூப் **C**-இன் கீழ் பட்டியலிடப்பட்ட அரிய வகை நோய்கள்.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நிலுவையில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஒன்றிணைந்த போராட்டங்கள் அறிவிப்பு

நமது மாநிலத்தில் உள்ள **23** மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் கீழ்கண்ட பிரச்சனைகள் கடந்த பல மாதங்களாக தீர்க்கப்படாமல் உள்ளன.

❖ மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பணிநிலைத்திறன் **(CADRE STRENGTH)** கடந்த **2006** ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்டது. அதன் பின்பு **200** க்கும் மேற்பட்ட புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. சுய உதவி குழுக் கடன், சிறுவணிக கடன், பணிபுரியும் மகளிர் கடன், சம்பளக் கடன், சிறுகுறு தொழில் முனைவோர் கடன் மற்றும் பல அரசு நலத்திட்ட கடன்கள் வழங்கும் பணிகளால் பணியாளர்கள் பணிச்சுமை அதிகரித்துள்ளது.

எனவே, வங்கிகளில் கூடுதல் பணியாளர்கள் தேவைப்படுகிறது. இருப்பினும் பணிநிலைத்திறன் கடந்த **17** வருடங்களாக திருத்தி அமைக்கப்படவில்லை.

❖ மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் சுமார் **400** உதவி மேலாளர் பதவிகள் நேரடி பணி நியமனத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு காலியாக உள்ளன. இதனை ஒருமுறை நிகழ்வாக கருதி பதவி உயர்வுகள் மூலம் நிரப்பிட வேண்டும் என்கிற நமது கோரிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

❖ மத்திய கூட்டுறவு வங்கிகளில் பொது மேலாளர், உதவி பொது மேலாளர் பணிகள் தற்போது பொதுப்பணி நிலையில் உள்ளன. ஆனால் இதன் காரணமாக வங்கிகளில் எந்த குறிப்பிடத்தக்க மாற்றங்களோ முன்னேற்றங்களோ ஏற்படவில்லை. எனவே இதனை கைவிட வேண்டும் என்று கோரிவருகிறோம். ஆனால் இதற்கு மாறாக தற்போது அனைத்து பணிநிலை பணியாளர்களையும் பொதுப்பணி நிலைக்கு கொண்டு வருவது குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டுள்ளது. இது வங்கிகளுக்கும், ஊழியர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

❖ கூட்டுறவு வங்கிகளில் தலைமை நிர்வாக அதிகாரி **RBI / NABARD** அறிவுரையின்படி **FIT & PROPER CRITERIA** படி நியமிக்கப்பட வேண்டும்.

❖ கூட்டுறவு வங்கிகளில் பணியாளர்களின் நியமனங்கள் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட **IBPS** மூலம் நடைபெற வேண்டும்.

❖ மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை குழு திருத்தி அமைக்கப்பட்டு நமது கோரிக்கை சாசனம் மீது பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

❖ மாவட்ட மத்திய ஊழியர்களின் கல்வி சலுகைகள் ஒப்பந்த ஷரத்துகள்படி மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியாக வழங்கப்பட வேண்டும்.

❖ கடந்த காலங்களில் இதே கால கட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளில் தற்போது **20** சதவீதம் மட்டுமே பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, விவசாயிகளின் துயர் துடைக்க உடனடியாக பயிர்க்கடன்கள் வழங்கப்பட வேண்டும்.

❖ மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொழில்நுட்ப சேவைகளில் பல குளறுபடிகள் உள்ளன. எனவே அவற்றை உடனடியாக மேம்படுத்தப்பட வேண்டும்.

❖ வங்கிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள ஓய்வு காலப் பயன்கள் காலம் தாழ்த்தாது வழங்க வேண்டும்.

❖ ஊழியர்கள் மத்தியிலுள்ள ஊதிய முரண்பாடுகள் உடனடியாக களையப்பட வேண்டும்.

❖ வங்கிகளிலிருந்து ஏற்கனவே ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு கருணை ஊதியமாக ரூ **10,000** வழங்க வேண்டும். தற்போது பணியில் உள்ள ஊழியர்களுக்கு மாற்று ஓய்வூதிய திட்டம் அமல்படுத்த வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் அனைத்திற்கும் தீர்வு காண வேண்டும் என்று மாநில சங்கம் தொடர்ந்து பதிவாளர் அலுவலகத்தினை வலியுறுத்தி வந்தாலும் இதுவரை ஒரு பிரச்சனைக்கு கூட தீர்வு காணப்படவில்லை. கடந்த **28-07-2026** அன்று நமது மாநில சங்க நிர்வாகிகள் தற்போதைய பதிவாளர் திருமதி. **G** லதா **IAS** அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தினர்.

மீண்டும் கடந்த 29-09-2026 அன்று மாநில பதிவாளர் அவர்களை மீண்டும் சந்தித்து கோரிக்கை குறித்து எடுத்துரைக்க சென்ற போது அவற்றை அவர் செவிமடுத்து கூட கேட்பதற்கு தயாராக இல்லை.

பதிவாளர் அவர்களின் இத்தகைய அணுகுமுறையை கண்டித்தும் நமது கோரிக்கைகள் மீது உடனடியாக தீர்வு காண வலியுறுத்தியும் கீழ்க்கண்ட முதற்கட்ட போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

07-10-2026	கோரிக்கை அட்டை அணிதல்
14-10-2026	மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் கூட்டு மனு அளித்தல் மற்றும் வாட்ஸ்அப் மூலம் கோரிக்கை விடுத்தல்.
22-10-2026	மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைமையகம் முன்பு ஆர்ப்பாட்டம்
28-10-2026	மாவட்ட தலைநகரங்களில் தர்ணா போராட்டம்

நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளின் மீது தீர்வு காணாத பட்சத்தில் வேலைநிறுத்தம் உள்ளிட்ட இரண்டாம் கட்ட போராட்ட நடவடிக்கைகள் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தை கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

மத்திய கூட்டுறவு வங்கி பணியாளர்களை வங்கி நிர்வாகங்களும் பதிவாளர் அலுவலகமும் நடத்திடும் முறைகள் முற்றிலும் தவறானவை. ஊழியர்களை கொத்தடிமைகளாக கருதி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை கிடப்பில் போட்டு வைத்துள்ள அணுகுமுறை கண்டனத்திற்குரியது. இந்நிலை முற்றிலும் மாற்றப்பட வேண்டும். எனவே மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை முழு வெற்றியடைய செய்திட வேண்டும்.

உலகெங்கும் தொழிலாளர் வர்க்கம் போராடாமல் எதையும் பெற்றதில்லை. போராடி தோற்றதாகவும் சரித்திரம் இல்லை. அத்தகைய சரித்திரத்தை நமது போராட்டங்கள் மூலம் நமது வங்கிகளில் நாம் படைத்திடுவோம் என்று தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் சூளுரைத்துள்ளது.

உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் (WFTU)
81 வது ஸ்தாபன தினம் - 03 அக்டோபர் 2026
உலகளாவிய செயல் நாளாக அனுசரிக்க அறைகூவல்

உலகத் தொழிற்சங்க சம்மேளனம் (WFTU), அதன் ஸ்தாபன நாளினைக் குறிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 3-ஆம் தேதியை 'சர்வதேச செயல்பாடு நாள்' (INTERNATIONAL DAY OF ACTION) ஆகக் கடைப்பிடிக்குமாறு உலகெங்கிலும் உள்ள தொழிலாளி வர்க்கத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கிறது.

'சர்வதேச செயல்பாடு நாள்' ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று முக்கியக் கோரிக்கைகளை மையமாகக் கொண்டுள்ளதாக **WFTU** கூறியுள்ளது. அவை,

- ஏகபோக நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்களின் ஆதிக்கத்திற்குப் பதிலாக, மனிதகுலத்தின் சேவைக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் அமைய வேண்டும்
- தொழிலாளர்களின் சமகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான, உரிமைகளுடன் கூடிய வேலைவாய்ப்பு வேண்டும்
- போர் மற்றும் அழிவுக்கானதாக இல்லாமல், முன்னேற்றத்திற்கான பொருளாதாரமாக அமைய வேண்டும்

உலகளாவிய வர்க்க ஒற்றுமை மற்றும் சர்வதேச தொழிற்சங்க ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை **2026**-ஆம் ஆண்டிற்கான சர்வதேச செயல்பாடு நாள், தொழிலாளி வர்க்கத்திற்கு வழங்குகிறது. இந்நாளில் நம் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்க உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (**WFTU**) அழைப்பு விடுத்துள்ளது.


தொழில்நுட்ப சாதனைகளும் அவற்றால் விளைந்த உற்பத்தித் திறன்களும், மனிதகுலம் இதுவரை கண்டிராத மிக மேம்பட்ட, முழுமையான மற்றும் நம்பிக்கைக்குரிய நிலையில் உள்ளன என்பதில் ஐயமில்லை. கடந்த **100-200** ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றம், சமூகத்தின் உற்பத்தித் திறனை முன்னெப்போதும் இல்லாத வகையில் வலுப்படுத்தியுள்ளது. இன்றைய உற்பத்தி சக்திகளின் பிரம்மாண்டமான நிலை என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உண்மையாகும்.

முதலாளித்துவ அமைப்பின் கட்டமைப்பிற்குள், தொழில்நுட்பமானது பெரும்பான்மையான மக்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, ஒரு சிலரின் லாபத்திற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

மனித உற்பத்தித் திறனின் வளர்ச்சியைப் பயன்படுத்தி வேலை நேரத்தைக் குறைப்பதற்கும் பணிச் சூழலை மேம்படுத்துவதற்கும் பதிலாக, மலிவான மற்றும் பாதுகாப்பற்ற உழைப்பைச் சுரண்டுவதை தீவிரப்படுத்தும் மற்றொரு வழியாக, நெகிழ்வுத்தன்மை கொண்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத வேலைவாய்ப்பு முறைகள் அதிகரிப்பதை நாம் காண்கிறோம்.

தொலைதூர வேலை (**remote work**) என்பது நவீன மற்றும் ஊழியர்களுக்கு உகந்த ஒரு பணி முறையாக முன்வைக்கப்பட்டாலும், நடைமுறையில் அது நீண்ட வேலை நேரம் மற்றும் தீவிரமான பணிச்சுமைக்கு வழிவகுக்கிறது. அதே வேளையில், வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு இடையிலான எல்லைகளை மங்கச் செய்து, வேலை தொடர்பான மன அழுத்தம் மற்றும் தனிமை உணர்வை அதிகரிக்கிறது.

மேலும், செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றின் வளர்ந்து வரும் ஆதிக்கம் தொழிலாளர் உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உற்பத்தியில் தானியக்கமாக்கல் (automation) மற்றும் செயற்கை நுண்ணறிவின் நடைமுறைப் பயன்பாடு ஆகியவை மனித உழைப்பை இடமாற்றம் செய்தல், பணியின் திறனைக் குறைத்தல் (deskilling) மற்றும் வேலைவாய்ப்பின்மையை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தொழிலாளர்களின் வேலை மற்றும் ஊதியத்திற்கு அச்சுறுத்தலாக அமைகின்றன.



முதலாளித்துவக் கட்டமைப்பிற்குள் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது, தொழிலாளர்களின் நிலையான வேலை நேரம் மற்றும் ஊதியம், ஊதியத்துடன் கூடிய விடுப்பு, வேலையின்மைக்கான சலுகைகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் பிற அடிப்படை உரிமைகள் போன்றவற்றை இழக்கச் செய்கிறது. அதே வேளையில், இது தொழிற்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும், தொழிலாளர்களின் பேரம் பேசும் சக்தியைக் குறைப்பதற்கும் வழிவகுப்பதன் மூலம் அனைத்துத் தொழிலாளர்களையும் பாதிக்கிறது.

இன்று, கண்ணியமான வேலை மற்றும் கண்ணியமான வாழ்க்கைக்கான அனைத்துச் சூழல்களும் அமைந்திருந்தாலும், தொழிலாளர்கள் வறுமை, துயரம், போர் மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர். இந்த மாற்றங்களை எதிர்கொள்வதற்கான வரலாற்று அனுபவம் தொழிலாளர்களுக்கு உண்டு. உற்பத்தித் திறனைப் பெருமளவில் அதிகரிக்கும் என்று உறுதியளிக்கும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள், இயல்பாகவே ஒரு பிரச்சனையல்ல என்பதையும் தொழிலாளர்கள் அறிவார்கள்.

தொழில்நுட்ப முன்னேற்றமானது தொழிலாளர்கள் மற்றும் சமூகத்தின் பெரும்பான்மையினரின் நலன்களுக்குப் பயன்படும் வகையிலும், கண்ணியமான வேலை மற்றும் வாழ்க்கைச் சூழலுக்கு வழிவகுக்கும் வகையிலும் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்வதே முக்கியப் பிரச்சினையாகும். WFTU-வின் (உலகத் தொழிலாளர் கூட்டமைப்பு) 81-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, வர்க்கப் போராட்டப் பாதையைச் சார்ந்த தொழிலாளர் இயக்கம், உலகம் முழுவதும் உள்ள தீவிரமான தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களையும், அறிவிக்கப்பட்டுள்ள 'சர்வதேச நடவடிக்கைத் தினத்தில்' (International Action Day) தீவிரமாகப் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கிறது.

தொழிலாளர்களுக்குப் பயன்படும் தொழில்நுட்பம், கணிசமான ஊதிய உயர்வு, முழு உரிமைகளுடன் கூடிய நிலையான வேலை, அனைத்துப் பணித்தளங்களிலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, பொது மற்றும் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய சுகாதாரம்-கல்வி-சமூகப் பாதுகாப்பு அமைப்புகள், மக்களின் சமகாலத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வகையிலான உயர்தர வேலை மற்றும் வாழ்க்கைச் சூழல், மற்றும் செல்வத்தை உருவாக்கும் உழைப்பாளிகளே அதன் பலனை அனுபவிக்கும் சமூகம் ஆகியவற்றுக்கான நமது போராட்டத்தை வலுப்படுத்துவோம்.

தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுகிறார்கள் என்பதையும், முதலாளிகளின் இலாபத்திற்கு முன்னுரிமை அளிக்க தொழிலாளர்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதையும், ஏகபோக முதலாளிகளின் போர்களையும் சுரண்டலையும் தொழிலாளர்கள் எப்போதும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் உலகிற்கு உணர்த்தும் வகையில் இந்த 'சர்வதேச செயல்பாடு நாள்' நடவடிக்கை தினத்தை அனுசரிப்போம் என்று **WFTU** அறைகூவல் விடுத்துள்ளது.

நம் தலைவர்களின் தியாக வரலாற்றினைப் போற்றி நினைவு கூர்வோம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தன்னிகரில்லா தலைவர்
தோழர் பிரபாத்கரின் **117** வது பிறந்த நாளில்
ஸ்தாபனத்தை மென்மேலும் பலப்படுத்த உறுதியேற்போம் !
(13 OCTOBER 1910 – 27 NOVEMBER 1984)

வங்கி ஊழியர்களின் நெஞ்சினில் என்றென்றும் வாழும் தோழர் பிரபாத்கர்

வங்கி ஊழியர் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவராக இருந்து நமது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை வலிமைமிக்க தொழிற்சங்க இயக்கமாக பரிணமிக்கச் செய்த தோழர் பிரபாத்கரின் **117**வது பிறந்த நாளில் நாம் அனைவரும் அவரை நினைத்துப் பெருமிதம் கொள்வோம்.



தோழர் பிரபாத்கர் இவ்வுலகில் வாழ்ந்த எழுபத்து நான்கு வருடங்களின் பெரும் பகுதியினை வங்கி ஊழியர் மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தார் என்பதை அனைத்து வங்கி ஊழியரும் அறிவோம்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தை கட்டமைத்தவராக மட்டுமின்றி, சங்கத்தினை தன் வாழ்நாள் முழுமையும் வழி நடுத்தியவராகவும் தோழர் பிரபாத்கர் விளங்கினார்.

கொல்கத்தா நகரில் 1933ம் ஆண்டு லாயிட்ஸ் வங்கியில் எழுத்தராக வங்கிப் பணியில் இணைந்தபோது, வங்கி ஊழியர்களுக்கென எந்தவொரு அடிப்படையான பணிவிதி முறைகளோ, தொழிற்சங்கமோ இன்றி வங்கி முதலாளிகளால் அடிமை போல் நடத்தப்பட்ட அவலமான நிலைமையினை மாற்றிட முனைந்து, 1933 முதல் 1946ம் ஆண்டு வரை வங்கி ஊழியர்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் தோழர் பிரபாத்கர் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

வங்கி ஊழியர் கலங்கரை விளக்கமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் உதயம்

தொழிற்சங்க அர்ப்பணிப்பு கொண்ட இளம் வங்கி ஊழியர்களை ஒன்றுபடுத்தி, வங்கி ஊழியர்களுக்கான அகில இந்திய அமைப்பினை உருவாக்கவேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை 1941ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் நாளன்று தோழர் பிரபாத்கர் அறிவித்தார்.

அவருடைய முயற்சியின் விளைவாக 1946ம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாளன்று அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கொல்கத்தா நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. வங்கித் துறைக்கென ஒரே சங்கமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விளங்கிடவேண்டுமென்ற ஒரே வேட்கையுடன், தோழர் பிரபாத்கர் தொடர்ந்து பாடுபட்டு அனைத்து ஊழியர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் அயராது ஈடுபட்டார்.

ஜஸ்டிஸ் சென் முத்தரப்பு தீர்ப்பினை (SEN AWARD) சென்ட்ரல் வங்கியில் அமல்படுத்திட வேண்டி 1948ம் வருடம், கொல்கத்தாவில் சென்ட்ரல் வங்கி ஊழியர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போதைய வங்காள மாகாண வங்கி ஊழியர் சங்கத்தின் (BPBEA) பொதுச் செயலராக இருந்த தோழர் பிரபாத்கர் இப்போராட்டத்திற்கு ஆதரவாக, ஆகஸ்ட் 17, 1948 அன்று கொல்கத்தாவிலுள்ள அனைத்து வங்கி ஊழியர்களையும் வேலைநிறுத்தம் அனுசரிக்க அறைகூவல் விடுத்து, அதனைத் தலைமையேற்று நடத்தியமைக்காக தோழர் பிரபாத்கரை, லாயிட்ஸ் வங்கி தற்காலிகப் பணிநீக்கம் செய்தது.

இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களையும் லாயிட்ஸ் வங்கி நிர்வாகம் 27அக்டோபர் , 1948ம் நாளன்று பணி நீக்கம் செய்தது. அதனை எதிர்த்து சுமார் பத்து ஆண்டுகள் நடைபெற்ற சட்டப் போராட்டத்திற்குப் பின்பு, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, தோழர் பிரபாத்கர் தவிர மற்ற ஊழியர்கள் பணியில் மீண்டும் சேர்க்கப்பட்டனர்.

முப்பத்து எட்டே வயதான தோழர் பிரபாத்கர், அன்றிலிருந்து வங்கி ஊழியர் இயக்கத்திற்காகப் போராடுவதை தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டார். 1953ம் ஆண்டு லக்னோ நகரில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஐந்தாவது மாநாட்டினில் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பெற்ற தோழர் பிரபாத்கரின் வாழ்க்கை முழுமையுமே அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒரு அங்கமாக மாறியது.

வங்கி ஊழியர் நலனே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட தோழர் பிரபாத்கர்

1953 முதல் 1966ம் ஆண்டுவரை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட தீவிரமான போராட்டக் களத்தின் தளகர்த்தராக தோழர் பிரபாத்கர் விளங்கினார். இக்காகலகட்டத்தில் நமது சங்கம் மிகப்பெரும் சக்தியாக உருவெடுத்ததுடன், தோழர் பிரபாத்கர் தலைமையில் கடுமையான போராட்டங்களை சட்ட ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் கையிலெடுத்தது. அதே சமயம் 1957ம் ஆண்டு தோழர் பிரபாத்கர் கொல்கத்தாவின் ஹூக்ளி தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் பிரபாத்கரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நமது இயக்கத்திற்கு பேருதவியாக அமைந்ததன் வாயிலாக, நலிவுறும் வங்கிகளை மூடுவதற்கு பதிலாக பிற வங்கிகளுடன் இணைக்க வேண்டும் என்ற முக்கியமான சட்டப் பிரிவினை வங்கிகள் கம்பெனி சட்டத்தில் திருத்தம் கொண்டுவரக் காரணமாக அமைந்தார். இந்நடவடிக்கை மூலம் எந்தவொரு காரணத்திற்காகவும் நலிவுற்று மூடும் நிலை ஏற்படும் வங்கியில் பணியாற்றும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பிற்கும், வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைக்கும் உத்திரவாதம் ஏற்பட்டது.

இருதரப்பு ஊதிய ஒப்பந்தம் - AIBEA சங்கத்தின் முன்னோடிச் சாதனை

1962ம் ஆண்டு மீண்டும் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், 1957ம் ஆண்டு முதல் 1967ம் ஆண்டுவரை பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வங்கி ஊழியர் மற்றும் வங்கித்துறை தொடர்பான பிரச்சனைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றார் தோழர் பிரபாத்கர்.

தோழர் பிரபாத்கரின் சீரிய தலைமை மற்றும் வழிகாட்டுதலில் நடைபெற்ற வலிமைமிகு போராட்டங்களின் விளைவாக முதன்முறையாக வங்கித்துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இருதரப்பு ஒப்பந்தம் 1966ம் ஆண்டு வென்றெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தோழர் பிரபாத்கர் முன்னெடுத்து நடத்திய வலிமையான பிரச்சாரங்கள் மற்றும் போராட்ட நடவடிக்கைகளின் காரணமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் சாதனையில் மணிமகுடமாக தனியார் துறையிலிருந்த வங்கிகள் 1969ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன.

வங்கித்துறையின் கொள்கை முடிவுகளை வகுப்பதில் ஊழியர்களுக்கும் உரிமை

வங்கிகள் தேசியமய சாதனைக்குப் பின்பு, 1973ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 17வது மாநாட்டில், நாட்டு நலன் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு பொதுத்துறை வங்கிகள் ஆற்ற வேண்டிய கடமை, கடன் கொள்கைகள் போன்றவற்றில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும் அதன் உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டுமென்பதை சங்கத்தின் புதிய அணுகுமுறையாக தோழர் பிரபாத்கர் பிரகடனப்படுத்தினார்

வங்கிகள் தேசியமய சாதனைக்குப் பின்பு, 1973ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 17வது மாநாட்டில், நாட்டு நலன் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு பொதுத்துறை வங்கிகள் ஆற்ற வேண்டிய கடமை, கடன் கொள்கைகள் போன்றவற்றில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும் அதன் உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டுமென்பதை சங்கத்தின் புதிய அணுகுமுறையாக தோழர் பிரபாத்கர் பிரகடனப்படுத்தினார்.



1975ல் தோழர் பர்வானாவின் மறைவுக்குப் பிறகு, தோழர் பிரபாத்கரின் இயக்கப் பணிச்சுமை அதிகமானது. மூன்றாம் இருதரப்பு ஒப்பந்தத்திற்கு அன்றைய ஒன்றிய அரசு தடையாக இருந்தபோது, தோழர் பிரபாத்கர் 'சட்டப்படி வேலை செய்தல்', குறுகிய இடைவெளிகளில் வேலை நிறுத்தம் செய்தல் போன்ற வலிமைமிகு தொடர் போராட்டங்களை அறிவித்து, அரசாங்கத்தினைப் பணியச் செய்து மூன்றாவது இருதரப்பு ஒப்பந்தத்தை வென்றெடுத்தார்.

அதே காலகட்டத்தில், வங்கி அதிகாரிகளை ஒன்றிணைத்து **AIBOA** அமைப்பினை துவக்கி, அதன் நிறுவனத் தலைவராகவும் தோழர் பிரபாத்கர் விளங்கினார். 1953ம் ஆண்டிலிருந்து 1980 வரை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், 1980லிருந்து 1984 வரையில் தலைவராகவும் தொடர்ந்து இடைவிடாது சங்கப் பணிகளில் முழுமூச்சாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த சூழலில், 1984ம் ஆண்டு நவம்பர் 27ம் நாளன்று இரவு தொழிற்சங்க நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க பயணம் செய்துகொண்டிருந்த பொழுது தன் இன்னுயிர் நீத்தார் தோழர் பிரபாத்கர்.

தோழர் பிரபாத்கர் அவர்களை என்றும் நினைப்போம் - அவர் காட்டிய வழி தொடர்வோம்

தன் இறுதி மூச்சு வரையில் வங்கி ஊழியர் உரிமைகளுக்காகவும், தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினைக் கட்டி எழுப்புவதற்காகவும் தியாகம் செய்தார் தோழர் பிரபாத்கர் அவர்கள்.

வங்கி ஊழியர்களை ஒன்றிணைத்து, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை கட்டமைத்து, அதனை மாபெரும் சக்தியாக உருவாக்கி, மறைந்தாலும் என்றென்றும் நம்மை நம்பிக்கையுடன் வழி நடத்தி வாழ்ந்து கொண்டிருக்கும் தோழர் பிரபாத்கரின் பிறந்த நாளில் அவரை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்வோம்.



"அமைப்பு இல்லையேல் நாம் நிராயுதபாணிகள்
அமைப்பாகத் திரண்டால் நாம் பெரும் போர்ப்படை
போராட்டங்களே நம் ஆயுதம் - ஒற்றுமைதான் நமது கவசம்"
- தோழர் பிரபாத்கர்.